DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Miscellaneous | : | **DVC.No. 5/2025** |
| Deposition of witness for | : | **எ.ம.சா. 2** |

| | | |
|---|---|---|
| Name | : | பால்குமார் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day April of 2026

**எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் மதுரை ஆனையூரில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸ் நிறுவனத்தில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு தினகரன் அவர்களுக்கும், சுகந்தி ரோஸ்லின் அவர்களுக்கும் நடைபெற்று வருகிறது. அவர்கள் இருவருக்கும் 2019 ம் ஆண்டு சர்ச்சில் திருமணம் நடைபெற்றது. நான் திருமணத்தில் கலந்து கொண்டு, அதன் பின்னர் மாஸ்டர் மஹாலில் வரவேற்பில் கலந்துகொண்டேன். அவர்கள் இருவரும் திருமணத்திற்கு பின்னர் கோச்சடையில் உள்ள ஒரு வீட்டில் 2 வது தளத்தில் குடியிருந்து வந்தார்கள். சுகந்திரோஸ்லின் அவர்களுக்கு அவரது பெற்றோர்கள் பெந்தகோஸ்த்து என்ற காரணத்தினால் திருமணத்திற்கு நகை எதுவும் சீர்வரிசையாக கொடுக்கவில்லை, கட்டில், மெத்தை மட்டும் சீர்வரிசையாக கொடுத்தார்கள். பின்னர் சண்டை வந்த பிறகு அந்த பொருளையும் திரும்ப பெற்றுக்கொண்டார்கள். திருமணம்

ஆன சில நாட்களிலேயே தம்பதிகளுக்கிடையே சிறு சிறு பிரச்சனை வரும் என்றும், சுகந்தி ரோஸ்லின் தினகரனை சந்தேகம் செய்து வருவார் என்றும், தினகரன் என்னிடம் கூறினார். பின்னர் அவர்கள் இருவருக்கும் இடையே 2020 ம் ஆண்டே பிரச்சனை பெரிதாகி சுகந்தி ரோஸ்லின் தினகரனை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். பின்னர் நானும், தினகரனின் உறவினர்களும் சுகந்தி ரோஸ்லின் அவர்களின் வீட்டிற்கு சென்று சமதானம் பேசினோம். அப்போது சமதானம் ஏற்பட்டு தம்பதிகள் இருவரும் தனிக்குடித்தனம் இருப்பதாக ஏற்றுக்கொண்டார்கள். அதன்படி தம்பதிகள் இருவரும் கோச்சடையில் உள்ள வேற ஒரு வீட்டிற்கு குடித்தனம் சென்றார்கள். பின்னர் மீண்டும் சுகந்தி ரோஸ்லின் தினகரனை சந்தேகப்பட்டுவிட்டு சொல்லாமல் வீட்டிலிருந்து வெளியே சென்றுவிட்டார். பின்னர் மீண்டும் நானும், தினகரன் உறவினர்களும் சமதானம் பேச முற்பட்டோம், ஆனால் சமதானம் ஏற்படவில்லை. பின்னர் தினகரன் மீது சுகந்தி ரோஸ்லின் காரியாபட்டி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தார். அது சம்மந்தமாக விசாரணை நடைபெற்றது. பின்னர் காரியாபட்டி நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதாக தினகரன் என்னிடம் தகவல் கூறினார். நான் தினகரன் வீட்டிற்கு அடிக்கடி செல்வேன், அப்போது சுகந்தி ரோஸ்லின் அவர்களை நல்ல முறையில் தான் கவனித்து வந்தார், அடிக்கவோ, கொடுமைப்படுத்தவோ இல்லை. பால்குமார் அவர்களின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீட்டு பார்த்து குறியீடு செய்யப்படும் நகல் **எ.ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளை ஏற்று குறுக்கு விசாரணை வேறொரு நாளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**